ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2272/41 - 2022 මාර්තු මස 23 වැනි බදාදා - 2022.03.23

2272/41 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DSM/YT/LAND/5/8.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/96/HA/381.

யட்டவத்தை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பு மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பிற்காக காணியின் ஒரு பகுதியை எடுத்துக் கொள்வதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், யட்டவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், அஸ்கிரி பல்லேசிய பற்று சிறு பிரிவில், இல. E337B, டன்கன் பிளேஸ் கிராம அலுவலர் பிரிவில், தீவில்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தின் ஆரம்ப வரைபட இல. மா 1855 இல் குறிப்பிடப்பட்ட டன்கன் வத்தை எனும் காணியின் 0.3062 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் விபரங்கள் :

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : டன்கன் வத்தை; விபரம் : யட்டவத்தை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பு மற்றும் உதவி பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பிற்காக காணியின் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளல்; உரிமை கோருவோர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.3062 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யட்டவத்தை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. ஆர். கே. ஹென்நாயக்க,
பிரதேச செயலாளர்,
யட்டவத்தை.

பிரதேச செயலகம்,
யட்டவத்தை,
2022, மாச்சு 18.

EOG 03 - 0993